## ஆயுத பூசெய் வாழ்த்து 07-10-2019

நன்றியில் பெரியன் தமிழன்;
நானிலம் போற்ற வாழ்ந்தான்!
மன்றினில் நிறைந்த மதியால்,
மகிழ்வுடன் கருவியைப் பூசித்தான் !
தோன்றிய அறிவின் கொற்றம்,
தொடங்கிய நாமடந்தையாக;
ஆன்றநல் ஆரியர். கரம்கோத்து,
அணைத்ததோ நவராத்திரி!

மண்ணகம் போற்றும் கலைவடிவம்,
மருவிலா தெய்வமாய் நாமகளும்,
திண்ணிய ஆரிய நினைவுடனே,
திகழ்ந்திடும் ஒன்பதாம் நாளின்று,
மன்னியத் தமிழரின் நன்றியுடன்,
, மானுட வாழ்வில் செய்ததுவே!
இன்னிய நாளில் யாவருக்கும்;
இயம்பினேன் வாழ்த்து தானே!

## சரஸ்வதி பூசெய் ஆகிய ஆயுத பூசெய்!

ஆன்றநல் அறிவின் வழியோ!
அழகிய கலையின் வடிவோ!
தோன்றியோர் வழக்காய் நிறைந்து,
தொய்வின்றிக் காணும் விழா!
ஆன்றநல் தமிழர் தாமும்,
அறிவினால் பலவும் செய்தார்!
ஊன்றியக் கருத்தாய் சுத்தம்
உருபெறும் நிலையும் செய்யும்!

ஆங்குயர் பொருட்கள் யாவும்,
அரியநல் நிலையைக் காக்க,
தாங்குமோர் விழா வென்றே
தயக்கமின்றிச் சொல்வேன் யானே!
தீங்கின்றி கலன்கள் யாவும்,
திகழ்ந்திடல் வேண்டுமன்றோ!
ஈங்கிவர் சீர்மைச் செய்ய,
எடுத்தவோர் நல்விழா வாமே!

மேழியும் கலமும் நாளுமாய்
நெய்யும் பொறியும் கொண்டு,
ஆழிசூழ் உலகில் வாழ்ந்த,
ஆன்றயெம் தமிழர் அறிவில்,
நாழியும் கலனும் என்றும்
நலமுடன் பேணிக் காத்து,
வீழாப் பெருமை கொண்டு,
வியத்தகு விழைவைச் செய்தான்!

**கவிவளவன் 14-10-2021**

## கலைமகளே அறிவின் செல்வி!

அறிவுக் கண் திறப்பாள்!
ஆற்றலையும் வளர்ப்பாள்!
இகத்தில் அறிவின் செல்வி;
அவளே எனவாய்,
ஈடில்லா சான்றோர்,
தாமும் நமக்கு,
உருபெறும் அறிவில்
நிலைக்கும் வகையாய்;
ஊருக்குள் நாளும்
சொல்லியே வளர்த்தார்!
எளிமையே என்றும்,
அறிவின் கொற்றம்!
ஏற்றமே நமது,
செயலின் நிலைக்கலன்!
ஐயமே நல்லதோர்
அறிவின் மாட்சி!,
ஒற்றுமை என்பது,
அன்பின் செயல்நிலை!
ஓங்கும் யாவுமே
வாழ்வை நிறைக்கும்!
ஔவையின் தமிழாய்;
நாளும் நிறைந்தே!
அஃதே உளவியல்
அறிவீர் தாமே!
. 25-10-2020